RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt22s224

# இளந்தேவன் கவிதைகளில் அழகியல்

புு. தீர்த்தராமன் [அ, *], ஆ. சிலுவைமுத்து [ஆ]

[அ] தமிழ்த்துறை, பெரியார் பல்கலைக்கழகம், சேலம்-636011, தமிழ்நாடு, இந்தியா.

[ஆ] தமிழ்த்துறை, தொன்போஸ்கோ கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தருமபுரி-636809, தமிழ்நாடு, இந்தியா.

# Aesthetics in Ilandevan Poems

P. Theertharaman [a, *], A. Siluvaimuthu [b]

[a] Department of Tamil, Periyar University, Salem-636011, Tamil Nadu, India

[b] Department of Tamil, Don Bosco College, Dharmapuri-636809, Tamil Nadu, India

* Corresponding Author: theertharamananitha@gmail.com

Received: 21-03-2021
Revised: 12-01-2022
Accepted: 15-01-2022
Published: 28-02-2022

Check for updates

**ABSTRACT**

Aesthetics is the ability to explore aesthetics, to explore the race of beauty in works of art, and to create works with taste. In Tolkappiyam, the oldest grammar book in the Tamil language, both rhetoric and allegory are said to be aesthetically pleasing. The poet also gives shape to his thought. This is what we call aesthetics, which lines the imagination and injects aesthetic elements into the poem. Poet ILandevan, who is good at writing poetry with aesthetic and aesthetic elements, has used aesthetic elements in his poetry collection to strengthen his language, technique, form and thought. he has used the moon, the sky, and the milky way galaxy as his objects of natural expression.

**Keywords:** Aesthetics, Poetry and Aesthetics, Nature and Aesthetics, Prable and Aesthetics.

## முன்னுரை

தொன்மை வாய்ந்த மொழி நம் தமிழ்மொழி. தமிழ் மொழியில் இருக்கின்ற இலக்கியங்கள், கவிதைகளில் இயற்கையாகவே அழகியல் தன்மை, அழகியல் கூறுகள் காணப்படுகிறது. தமிழ் மொழியின் பழமையான இலக்கண நூலான தொல்காப்பியத்தில் செய்யுளியல், உவமையியல் ஆகிய இரண்டு இயல்களும் அழகியல் சார்ந்து சொல்லப்பட்டுள்ளது (Ilampuranar, 1969; Sivalingan, 1995). கவிஞன் தன் கவிதைகளில் மொழிநடை, சிந்தனை கற்பனை, பாக்கள், அணிநயம், உவமை, உத்தி, வடிவம் என புகுத்தி படிப்பவரின் மனதில் அழகியல் தன்மையை உணர்த்துகிறான் கவிஞன். அழகியல் தன்மையை தன் கவிதைகளில் பயன்படுத்தி வெளிப்படுத்தியவர் அவரைப் பற்றி இக்கட்டுரையானது அமைக்கப்பட்டுள்ளது (Ilanthevan, 2003).

## அழகியல்

அழகியல் என்பது அழகியல் தன்மையை ஆராய்வதும், கலைப்படைப்புகளில் அழகை இனம் கண்டு இரசிப்பதும், சுவையுடன் படைப்புகளைப் படைப்பதும் பற்றிய இயலாகும்.

அழகியல் என்பது கலைப்படைப்புகளின் ஓர் அங்கம். கலைகளின் இளவரசியே கவிதை கவிதையின் மூலம் அழகியல் தன்மையை கவிஞன் வெளிப்படுத்துகிறான். அத்தகைய கலை உலகில் அழகியல் தன்மை, அழகியல் கூறுகள் கவிதையில் பயன்படுத்தியவர் (Ilanthevan, 2003). இவரின் கவிதைகள் இயற்கை, சமூகம், பெண்மை, மதம் என பாடுபொருள்களாக உள்ளது. இவர் சிந்தனை, கற்பனை உத்தி, உவமை, வடிவம் ,ஓசைப்பாக்கள் சார்ந்து கவிதைகளில் பயன்படுத்தியுள்ளார்.

## கவிதையும் அழகியலும்

கவிதை என்பது சிந்தனை, கற்பனையின் வெளிப்பாடு ஆகும். கவிஞன் தன் படைப்புகளில் கற்பனை வளம் அதிகம் பயன்படுத்துகிறான். அவ்வாறு பயன்படுத்தும் கற்பனை வளத்திற்கு அழகியல் தன்மைகள், அழகியல் கூறுகளைக் பொருத்திப் பார்க்கிறான். கவிதைகளைப் படிப்பவர்கள் அழகியல் உணர்வுகள் உணர வேண்டும் என்று மொழி நடையை பயன்படுத்தப்படுகிறது. இவ்வாறு தன் கவிதையில் அழகியல் தன்மையை பயன்படுத்தியவர் இவரின் 'வெளிச்சவிரல்கள்' என்னும் கவிதைத் தொகுப்பில் குழந்தை என்ற தலைப்பில் வெளிப்படுத்தியுள்ள அழகியல் மொழிநடை குழந்தைகள் தாயின் கருவறையில் இருக்கின்ற பூசணிக்காயாகவும், தன் அம்மாவிற்கு குடிக்கூலிதராத இருட்டறை வாசிகள் என்றும், தாயைப்பார்க்க தலைகீழாக தவத்தில் நிற்கிற மானுடக் குஞ்சுகளாகவும், தானே பையைத் திறந்து வெளிவரும் பத்துமாத சதை நாணங்களாகவும், கால்கள் முளைத்தக் குறுந்தொகைப் பாடல்கள், கைவிரல் படைத்த ரோஜா மொட்டுகள் குழந்தைகள் என்று நுணுக்கமாக எழுதியுள்ளார் (Ilanthevan, 2003; Parimanam & Balasubramaniyam, 2004).

"குடத்தில் இருக்கும் பூசணிக்காய்கள்!

குடிக்கூலி தராத இருட்டறை வாசிகள்!

தாயைப் பார்த்திடத் தலைகீழாகத்

தவத்தில் நிற்கிற மானுடக் குஞ்சுகள்

பையைத் திறந்து தாமே வெளிவரும்

பத்து மாதச் சதைநாணங்கள்

கால்கள் முளைத்த குறுந்தொகைப் பாடல்கள்!

கைவிரல் படைத்த ரோஜா மொட்டுகள்!" (Ilanthevan, 2003)

கவிஞர் இளந்தேவன் கவிதைப் படைப்பான 'வெளிச்ச விரல்கள்' என்னும் கவிதைத் தொகுப்பில் 'கடல் நடுவே ஒரு கண்ணீர்த்துளி' என்னும் தலைப்பில் இலங்கையை கண்ணீர்த்துளி என்றும், இராமாயணத்தில் சீதை அழுத கண்ணீர் என்றும், இலங்கை தமிழர் அழுத கண்ணீர் என்று கூறவில்லை பூமி என்னும் இவரின் கற்பனையின் மொழிநடை படிப்போரின் மனதில் அழகியல் உணர்வில் ஆழ்த்தும்.

"பாரழுத கண்ணீர்

பனிக்கடலாய்க் கிடக்க, இது

யாரழுத கண்ணீர்

அலை நடுவே மிதக்கிறது!

இது, அந்தச்

சீதை அழுததெனச்

செப்பியது இராமகதை!

தமிழென்னும்

கோதை அழுதெனக்

கூறவில்லை பூமியிதை!." (Ilanthevan, 2003)

## இயற்கையும் அழகியலும்

இயற்கை இந்த நூற்றாண்டு வரை அழியாமல் இருக்கும் அற்புதப் படைப்பு இயற்கை. இயற்கை சார்ந்த பாடுபொருள்கள் பயன்படுத்தாத கவிஞர்களே கிடையாது. பாரதியார், பாரதிதாசன், வாணிதாசன் என பட்டியலிட்டுக் கொண்டே போகலாம். அந்த வரிசையில் அவர்களை குறிப்பிடலாம் (Ilanthevan, 2003). இவரின் இயற்கை சித்தரிப்பு, வருணிப்பு, அழகியல் தன்மை, மொழிநடை படிப்போரின் மனம் கற்பனை உலகிற்கு இட்டுச் செல்லும். இவரின் 'கனவு மலர்கள்' என்னும் கவிதைத் தொகுப்பில்' புகாரில் ஒரு நாள்' என்ற தலைப்பில் புகார் நகரின் காலை காட்சிகள், கதிரவன் தோன்றுதல், கடலலைகள் ஒலி என மொழிநடை,சிறப்பாகக் கையாண்டுள்ளார். இளங்கோவடிகளுக்கு நிகராக இவர் வரிகளில் கற்பனை மற்றும் அழகியலைக் காணலாம்.

"தங்கக் கடல்மேல் தளிர்த்ததொரு வெள்ளிமலர்

வங்கக் கடல்மேலே வட்டக்கதர் வந்தான்!

நீலக் கடலலைகள் நீட்டி முழுங்கியிசை

ஞாலப் பெருநகராம் நல்லபுகார் வாழ்த்துரைக்கும்

காலைப்பெண் சூல்கொள்ளக் காணும் இடந்தோறும்

ஞாலத் துயிர்த்துடிப்பு; நாற்றிசையும் இன்பமயம்!."

'வானவில்' என்ற தலைப்பிலான இவரின் கவிதைச் சார்ந்த அழகிய வரிகள் கற்பனைகள் படிப்போரின் மனதிற்கு சிந்தனையை தூண்டும் விதமாக அமையப்பெற்றுள்ளது (Ilanthevan, 2003).

"ககனம் அழுகையிலே

கதிரங்குசிரிக்கையிலே

ஏழுநிறவில்லெடுத்தாய்

எவரோடு போராட?"

'தேவமொழிகள்' என்னும் கவிதைத் தொகுப்பில் கவிஞனின் சிந்தனையின் மொழிகள் சிற்பியின் துளிகளாய் வெளிப்படுத்தியுள்ளார் (Ilanthevan, 2003). கடல், பூமி என்ற தலைப்பிலான கவிதைகள் .

"கடல்

கதிரவன் முகம் பார்க்க

எவ்வளவுபெரியகண்ணாடி"

கதிரவன் முகம் பார்க்கும் கண்ணாடியாக கடல் உள்ளது என்று தன் இயற்கை மொழியை வெளிப்படுத்தியுள்ளார் (Ilanthevan, 2003).

"பூமி

அண்டவெளிக் குப்பையிலே

அகழ்ந்தெடுத்த குன்றிமணி

பாதிகருப்பு! மீதிசிவப்பு."

என்று வெளிப்படுத்தியுள்ளார் 'பூமி' பற்றிய இவருடைய இயற்கை சிந்தனை அண்டவெளி குப்பையில் அகழ்ந்தெடுத்த குன்றிமணியாம் பாதி கருப்பு மீதி சிவப்பு (Ilanthevan, 2003).

## உவமையும் அழகியலும்

தொல்காப்பியர் 'தொல்காப்பியத்தில்' உவமையியல் என்ற இயலில் உவமை, உருவகம் சார்ந்து குறிப்பிட்டுள்ளார் (Tolkappiyar, 2007). உவமை கவிஞனுக்கு மிக முக்கியமான ஒன்று இதைப் பற்றி டாக்டர் ச.வே.சுப்பிரமணியம் கவிதைக்கு அணியிலக்கணம் திலகமென்றால் அத்திலக வாசனை போல் அனைத்துள்ளங்களையும் கவர்வது உவமை என்பர் (Ilankumaranar, 2018). அத்தகைய உண்மையைத் தன் படைப்பில் பயன்படுத்தியவர் கவிஞர் இளந்தேவன். இவரின் 'கனவுமலர்' கவிதை தொகுப்பில் 'புகாரில் ஒரு நாள்' என்ற தலைப்பில் பூம்புகார் துறைமுக ஓடங்கள் கட்டெறும்புக்கும், சோழர் துறைமுகத்தில் சூழ்ந்த கப்பல். பொன்னையும், குதிரையும் தந்துவிட்டு அத்துடன் தமிழின் கலைப்பொருள், ஆடை, தந்தம், தமிழ்மணக்கும் முத்து, ஏலம் செந்தேன் மயிலிறகை வகைப்படுத்தி இருக்கும் வணிகப்பொருட்களை பார்க்கப் புறப்படுவார். சாலை வழியெல்லாம் சங்கத்தமிழ் முழங்கும் என்று புகாரின் சிறப்பை உவமையாக வெளிப்படுத்தியுள்ளார் (Ilanthevan, 2003).

"கட்டெறும்புக் கூட்டம் கலிங்கத்து மெல்லாடை
ஒட்டிவந் தூருதல்போல் ஓடங்கள் வந்தனவே!
வாழ வகைகூறும் வணிகப் புகார் கண்ட
சோழர் துறைமுகத்தைச் சூழ்ந்த பல கப்பல்களில்
பொன்னை இறக்கி புரவிகளைத் தந்துவிட்டுக்
கன்னற் றமிழின் கலைப்பொருளை ஆடையினைத்
தந்தத்தை முத்தைத் தமிழ்மணக்கும் ஏலத்தில்
செந்தேன் மயிலிறகைச் சேர்த்து வகைப்படுத்திப்
புத்தேள் உலகென்னும் பூம்புகார் உட்புறத்தில்
கத்தும் கடல்விட்டுக் காணப் புறப்படுவார்
சாலை வழியெல்லாம் சங்கத் தமிழ்முழங்கும்
காலைச் சிறுபறவை கண்டேன்அடடாவே!"

## முடிவுரை

அழகியல் தன்மை, அழகியல் கூறுகள் சார்ந்த படைப்புகளில் வெளிப்படுத்திய கவிஞர்கள் பாரதியார், பாரதிதாசன், வாணிதாசன் ஆகியோர். இவர்களின் படைப்புகளில் இயற்கை சித்தரிப்பு, இயற்கை வருணிப்பு, உவமை, மொழி நடை, அழகியல் என அனைத்துக் கூறுகளையும் வெளிப்படுத்தியுள்ளார்கள். இவரின் வரிசையில் தன் படைப்பில் அழகியல் தன்மையைக் கையாண்டவர் கவிஞர் இளந்தேவன். இவரின் கவிதையைக் கொண்டு அழகியல் நோக்கில் பார்க்கும்போது மொழிநடை, சிந்தனை, கற்பனை, உவமை அழகியல் எனக் கட்டுரையானது அமைந்துள்ளது.

## References

Ilampuranar, (1969) Tolkappiyam, The South India Saiva Siddhantha Works Publishing Society, Tinnevelly, India.

Ilampuranar, (1971) Tolkappiyam Porulathikaram, Kazhaga Veliyedu, Chennai, India.

Ilankumaranar, U.A., (2018) Tolkappiyam – Thelivurai, Fourth Tamil Sangam, Madurai, India.

Ilanthevan, (2003) Velicha Viralgal, Vanathi Publications, Chennai, India.

Parimanam, A.M., Balasubramaniyam, K.V., (2004) Kurunthogai, New Century Book House Pvt Ltd, Chennai, India.

Sivalingan, A., (1995) Tolkappiyam-Porulatikaram Uraivalam, International Institute Of Tamil Studies, Chennai, India.

Tolkappiyar, (2007) Tolkappiyam Sollathikaram, Saraswathi Mahal Library, Tanjore, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License